# அகநானூறு காட்டும் தமிழர் வாழ்வியல் முறைமைகள்

*முனைவர் வ. கணபதிராமன்*
இணைப்பேராசிரியர், தமிழியற்புலம்
சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சிதம்பரம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5771

### முன்னுரை

சங்க இலக்கியத்தில் காணலாகும் அகம் புறம் எனும் வகை தொகையானது தமிழர் தம் வாழ்க்கை முறையைப் பகுத்துக் காட்டும் தன்மை உடையதாக இருக்கின்றது. சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பெறார் என்கின்ற வழமையோடு சங்க இலக்கியங்கள் பேசுகின்ற பாடல்களில் தமிழர் வாழ்ந்த அன்பின் வாழ்க்கை முறையானது தெளிவாகத் தெரிகின்றது. பழந்தமிழர் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை நடத்தினர்.இயற்கை உயிரிகள் வழியாக அன்பு வாழ்க்கையைக் கற்றுக் கொண்டனர்.இதனால் இயல்புகள் மிகுந்த தலைவனும், தலைவியும், தோழியும், செவிலியும், நற்றாயும் இலக்கிய மாந்தர்களாக மாண்புடன் வலம் வந்தனர். இப்படித்தான் வாழ்ந்திடல் வேண்டும் என்று வாழ்க்கை முறைமையை வகுத்துக் காட்டியுள்ளதை அகநானூறு பாடல்கள் வழி எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

### அகமும் - அக உணர்வும் - சங்ககாலமும்

அகம் என்னும் சொல்லானது அகத்தே தோன்றுகின்ற உள்ளுணர்வினை எடுத்துக் கூறுகின்றதாக அமைகின்றது. ஆக வாழ்க்கை என்கிற போது அதில் காணலாகும் இருவகைப்பட்ட வாழ்வியல் முறைமைகளான களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை ஆகியவற்றை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ள பாடல்களை அகநானூறு இலக்கியத்தின் வழியாக அறிந்து கொள்கின்றோம். அக உணர்வுகளே இப்பாடல்களின் கருவாக அமைந்து இருக்கின்றன. “சங்க இலக்கிய அகப்பாடல்கள் ஒவ்வொரு பாடலும் ஏதாவது ஓரிரு உணர்வுகளை மையமாக வைத்து ஆக்கப்பட்டவை. எனவே இப்பாடல்களை உள்ளத்தில் ஊறும் அகஉணர்வுப் பாடல்கள் (poetryof heart) அல்லது அகப்பாடல்கள் என அழைத்தனர் சான்றோர் பெருமக்கள்”[1] இவ்வாறு ச.அகத்தியலிங்கம் கூறும் கருத்தின் அடிப்படையில் அக உணர்வுப் பாடல்களைக் கொண்டவையாக அகநானூற்று இலக்கியங்கள் அமைகின்றதைக் காணலாம்.

சங்க இலக்கியங்கள் உணர்வுக்கே முக்கியத்துவம் அளிப்பன என்பதை எடுத்துக்காட்ட பின்வரும் கூற்று உதவுகிறது. "அக இலக்கியங்களில் எந்தவொரு தனிப்பெயரும் கதை மாந்தர்களில் காணப்படுவதில்லை. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் சங்க இலக்கியங்களுக்கு மாந்தர்கள் முக்கியமல்ல. உணர்வுகள், ஆசைகள், அபிலாசைகள், ஆதங்கங்கள் போன்ற இத்தகையை பொது உணர்வுகளே முக்கியம். சங்க இலக்கியங்கள், அக இலக்கியங்கள் உலகப்பொது உணர்வுகளைக் கூறும் இலக்கியங்கள். இவற்றை (literature of universal thought, Experience and feeling) எனக் கூறினால் அது மிகையாகாது."[2]

இக்கருத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, சங்க இலக்கியங்களில் பேசப் படுகின்ற உணர்வுகள் அனைத்தும் சங்ககாலத் தலைவி, செவிலி, தோழி, தலைவன் ஆகியோரின் ஆசைகளும், ஆதங்கங்களுமாக இருப்பதை நாம் அறிகின்றோம். எனவே வலி என்பது உணர்வுகளின் வெளிப்பாடு என்கின்ற முடிவுக்கு நாம் வரலாம். சங்ககாலக் கவிதைகள் அவற்றின் ஆக்கத்தால் சிறந்து விளங்குகின்றன. அவை உருவாக்கப்பட்ட விதமே அக்கவிதைகளைக் காலந்தாண்டி நிலைக்கச் செய்கின்றன. "கவிதை என்பது மனித உள்ளத்துணர்வை எழுப்பி நிற்கும் ஒரு கலையாக்கம். சொற்கலையாக்கம் என்பதை நாம் உணரவேண்டும். இதனை எல்லாக் கவிஞர்களும் உணர்ந்துள்ளனர். இதனால் தான் எந்த ஒரு பொருளின் கருவையும் அதனை எவ்வாறு எவற்றுடன் சேர்த்துக் கூறினால் உணர்வு பொங்கிடக் கூறமுடியும் என நன்கு சிந்தித்து அதற்கேற்பச் சில செய்திகளை அல்லது மனித அனுபவங்களையும் இவை போன்ற பிறவற்றையும் கவிதையில் கொண்டு வந்து பாடுபொருளுக்கு ஏற்ப, அவைகளைத் தெரிந்தெடுத்துப் பக்குவமாக இணைத்து வாசகர்களின் சிந்தனையைத் தொடுமாறு கூறுவர்."[3].

ஐந்திணை மரபுகளையும் ஐந்திணையில் வாழ்கின்ற மாந்தர்களின் வாழ்வியல் முறைகளையும் ஏற்புடைய கருப்பொருள் மற்றும் உரிப்பொருளோடு இணைத்துப் பேசுகின்றவையாக அகநானூற்றுப் பாடல்கள் அமைகின்றதைக் காணலாம். எனவே தான் அவை செவ்வியல் தன்மை கொண்டவையாகக் காலங்கடந்தும் நிற்கின்றன. கவிதை குறித்தும், அதன் மொழி குறித்தும் கூறவந்த அறிஞர்கள் பின்வரும் கருத்தை வெளிப்படுத்துகின்றனர். கோல்ரிட்ஜ் கூறும் போது 'poetry is an art of articulate language (wellak1970.p166)"[4] என்று கூறியிருப்பதை அகத்தியலிங்கம் எடுத்துக் காட்டிப்பேசுகின்றார். மேலும் மற்றொரு திறனாய்வாளரைப் பற்றியும் அவர் கூறுகின்றார்' கவிதை என்பது அர்த்த புஷ்டியுள்ள அருமையான சொற்களால் அழகுற அமைக்கப்படுகிற அருமையான ஒரு கலை எனக் கூறுவார்"[5] இப்படி அமைக்கப்படுகின்ற கவிதையானது கலைத் தன்மை உடையதாக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. கவிதையிலிருந்து கலைத்தன்மை உடையதாக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

கவிதையிலிருந்து வாழ்க்கையை எப்படி அறிந்து கொள்வது? கவிதையின் இன்பத்தை நுகர்வதிலிருந்து தொடங்கிக் கவிதையை முழுவதுமாக அறிந்து அதில் ஆழங்கால்படும் போது தான் அறிந்து கொள்ளலாம். "ஒன்றைப் பற்றி ஆய்ந்து ஆய்ந்து உண்மை காண முயலுகிறான் ஒருவன். ஆராயும் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு புதிய உண்மை புலப்படுகின்றது. ஆனால் அந்த அளவோடும் அது நின்றுவிடவில்லை. அவன் ஒன்றைக்கூட அறிந்தாலும் அவன் அறியாது விட்டது முன்னையிலும் இப்போது அதிகமாக அவனுக்குத் தெரிகிறது எனவே அவன் அப்பொருள்பற்றி அதிகமாக அறிய, அறிய அது பற்றிய அறியாத பகுதி மேலும் மேலும் பெருகிக் கொண்டே போகிறது. அதுபோலக் கவிதை என்பது பயில்வோர்க்கு

உண்டாக்கிக் கொண்டிருக்க வேண்டும். அதனுடன் அக்கவிதை பற்றி அறிய அறிய அது பற்றி அறிய வேண்டுவன இன்னும் அதிகமாகிக் கொண்டே செல்ல வேண்டும். இப்படிச் சென்றால் கவிதையின் முடிந்த முடிபை (பொருளைக் காண்பது எப்போது?) கவிதையின் நிலையே அதுதான். கவிதையின் முடிந்த முடிபை ஒருவராலும் அறுதியிட முடியாது என்பதே உண்மைக் கவிக்கு இலக்கணமாகும்"[6]

அகநானூற்றின் பாடல்களும் கவிதைகளாகவே இருப்பது நாமறிந்ததே. அதனைப் பயில்கின்றபோதெல்லாம் ஒரு புதிய வாழ்க்கை முறைமையின் சிறு கூறைக் காணமுடிகின்றது. அதுதான் கவிதையின் இலக்கணமாக அறிந்து கொள்ள வேண்டி யுள்ளது. தமிழர் தம் வாழ்க்கை முறை பொதிந்த கவிதையாக அகநானூற்றைக் காணலாம்.

## பண்டைத் தமிழர் பண்பு

சங்ககாலத் தமிழர் ஒருவரை மற்றவர் மதித்து ஏற்றுக்கொண்டு வாழத்தலைப் பட்டனர். அங்கே ஜாதி வேறுபாடு இல்லை. குலத்தை ஒன்றெனக் கருதிப் போற்றினர். செய்யும் தொழில் அடிப்படையில்தான் உயர்வு, தாழ்வு காணலாகும் என்பது பழந்தமிழர் எண்ணம்.சுசுவிலங்கு முதலிய தாழ்ந்த உயிர்களினின்றும் மக்களைப் பிரித்து உயர்திணையாக உயர்த்துவது மன உணர்வின்பாற்பட்ட நல்லொழுக்கமே. ஒழுக்கம் மேன் மேலும் உயர்வைத் தருவதால் அதனை உயிரினும் சிறந்ததாகப் போற்றுதல் வேண்டுமெனத் தமிழ்ச் சான்றோர் அறிவுறுத்துவோராயினர்.

ஒழுக்கம் இல்லாதார், மக்கள் வடிவிற் காணப்பட்டாலும், மாக்கள் (விலங்குகள்) என்றே இழித்துரைக்கப்படுவர். பண்டைத் தமிழ் மாந்தர் எல்லாரையும் ஒரு குலத்தவராகவே மதித்துப் போற்றினர். ஒத்த அறிவும் செயலும்" உடைய மக்களைப் பல்வேறு சாதியினராகப் பிரித்து வேறுபாடு கற்பிக்கும் இழிநிலை, சங்ககாலத் தமிழரிடையே காணப்படாததொன்றாம். மக்கள் செய்யுந் தொழில் வேற்றுமை காரணமாகவே அவர்களிடையே உயர்வு தாழ்வுகள் உண்டாகும் என்பது தமிழர் துணிபு"[7] இப்படிச் சங்க காலத்து மக்கள் தங்களது வாழ்க்கை முறையைச்சரியானபடி அமைத்துக் கொண்டனர். ஒருவனுக்கு ஒருத்தழ என்னும், உயர்திணை அல்திணை எனவும் உயிரைப் பகுத்து அறிவு சார்ந்த நெறிமுறைகளின்படி வாழ்ந்து வந்தனர்.

## அகமும் - புறமும் - அறம் -பொருள் -இன்பமும்

தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையின் இரண்டு கூறுகளைத் தெளிவாக முன்வைத்துள்ளனர். அவை அகவாழ்க்கை மற்றும் புற வாழ்க்கை என்பவையாகும். இந்த இருநிலைப்பட்ட வாழ்க்கையில் அவர்கள் நிறைவைக் கண்டனர். 'சுதமிழ் மக்களுடைய பழைய இலக்கணநூலாய் விளங்குவது தொல்காப்பியம். அந்நூல் மக்கள் வாழ்க்கையின் அகம், புறம் என இருவகையாகப் பகுத்து விளக்குகின்றது. ஒத்த அன்புடைய கணவனும், மனைவியும் கலந்து வாழும் குடும்ப வாழ்வநினை அகவாழ்வென்றும் இங்ஙனம் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் ஒன்றி வாழ்வதற்குரிய அரசியல் வாழ்வினைப் புறவாழ்வென்றும் வகுத்துரைத்தல் தமிழர் மரபாகும். அறம், பொருள், இன்பம் என்னும் இம்மூன்று பொருள்களையும் மும்முதற்பொருள் எனத் தமிழர் பாராட்டிப் போற்றுவர்.

எல்லா உயிர்களாலும் விரும்பப் படுவது இன்பம். அவ்வின்பத்திற்குக் காரணமாக மக்களால் ஈட்டப்பெறுவது பொருள், நடுவு நிலையில் நின்று அப்பொருளையீட்டுதற்கு உரிய ஒழுங்குமுறை அறம். அறத்தினால் பொருள் செய்து, அப்பொருளால் இன்பம் நுகர்தல் மக்கள் வாழ்க்கை முறையாகும்.

இம்முறையினை ஆசிரியர் திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பால்களாக வகுத்து விளக்குகின்றார்."[8] இப்படிப்பட்ட தமிழர்தம் வாழ்க்கை முறை தமிழர்களுக்கே உரிய பெருமை சேர்ப்படாக அமைகின்றதைக் காண முடிகின்றது. மற்ற நாட்டவரும் கண்டு வியக்கும் ஒன்றாகத் தமிழர் தம் வாழ்க்கை முறை அமைந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**களவு வாழ்விலும் அறம் கடைப்பிடித்தல்**

அக வாழ்வைத் தமிழர் இரண்டு வாழ்வியல் முறைகளாகப் பகுத்துக் கொண்டு வாழத்தலைப் பட்டனர். அவை களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை என்பவையாகும். அத்தகைய வாழ்வில் அறம் என்பது மிக முக்கியமானதாக கடைபிடிக்கப்பட்டது. சங்கத் தலைவி அறத்தைப் பின்பற்றுபவளாக இருக்கின்றாள். தோழி அதற்கு உதவுகின்றவாளக் காணப் படுகின்றாள்.

***மெய்யின் தீரா மேவரு காமமொடு***
***எய்யாய் ஆயினும் உரைப்பல் தோழி***
***ஆங்கு ஆங்கு ஒழுகாய் ஆயின்***
***அன்னை சிறு கிளி கடிதல் தோற்றால்..***
***(அகநானூறு -28)*** [9]

இந்தப் பாடல் பெண்களும் கிளி விரட்டுகின்ற பணியைத் தினைப் புனத்தில் செய்தனர் என்பது தெரிகிறது. மேலும் அப்பணியைச் சரியாகச் செய்தால் தான் அன்னை தொடர்ந்து அப்பணியை உனக்குத் தருவாள். நீயும் உன் தலைவனைக் காணமுடியும். எனவே அவன்மீதுள்ள மயக்கத்திலிருந்து விடுபட்டுக் கிளிகளைச் சரிவர விரட்டுவாயாக என்று தோழி கூறுவதிலிருந்து செய்வன திருந்தச் செய் என்கின்ற அறத்தைக் காதலின் பொருட்டுத் தலைவி கடைப்பிடிக்கும் மாண்பு தெரிகின்றது.

**பசலை நோயும் காதல் வாழ்வும்**

பசலை நோய் என்பது காதல் வாழ்க்கையுடன் தொடர்புடையது. தலைவியின் உடலை காதல் என்கின்ற பிரிவு நோய் வருத்துவதனால் உண்டா கின்ற ஒருவகைப் பிணி. இந்த நோய் வந்ததும் தலைவி உண்ணாமல், உறங்காமல் இருக்கின்றாள். இதனை அறிந்துகொண்ட தோழி தன் செவிலித்தாயிடம் இதுபற்றிக் கூறுகின்றாள். தலைவியின் நிலையைப் பற்றிக் குறிப்பால் உணர்ந்து கொள்ளுமாறு பேசுகின்றாள். இந்த மாண்பினை அகமாந்தர் வழியாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

***நின் மகள் உண்கண் பன் மாண் நோக்கிச்***
***சென்றோன் மன்ற அக் குன்று கிழவோனே***
***அவன்மறை தேஎம் நோக்கி மற்று இவன்***
***மகனேதோழி என்றனள் அதன் அளவு***
***உண்டு கோள் மதி வல்லோர்க்கே -***
***(அகநானூறு 48)10***

தலைவி தன் தோழியரோடு புக்களைக் கொய்து கொண்டு இருக்கையில் புலி புலி என்ற ஆரவாரம் கேட்க வெட்சி மாலை அணிந்து விரிந்த மார்புடைய ஒருவன் அங்கு வந்தான். அவனை நேருக்கு நேர் பாராமல் பலமுறை தன்மை உண்ட கண்களால் தலைவி பார்த்தாள் பின்னர் அவன் சென்ற பின்னர். நிஜமாகவே இவன் ஆடவன் தான் தோழி என்று தலைவி கூறினாள் அதன் உள் அர்த்தம் அறிவுடன் ஆழமாகச் சிந்திப்பவர்க்கே தெரியும் என்று கூறுகின்றாள். தலைவனைப் பார்த்தவுடன் அவன் மீதான தன் விருப்பத்தை மிக மென்மையாகவும் ஆழமாகவும் சொல்லும் நயம் இங்கு புலப்படுகின்றது.

**அறத்தோடு நிற்றலின் மேன்மையும் - நம்பிக்கையும்**

தலைவியின் காதலை அவளது பசலைக்கான காரணத்தைக் கூறுபவள் போலக் குறிப்பால் எடுத்துரைத்துத் தலைவியின் தாய்க்கும், பிற உறவினர்க்கும்

தெரியப்படுத்துவதே அறத்தோடு நிற்றல் என்னும் பண்பாகும். இப்பாடலில் தலைவன்கேட்டுக்கொண்டு இருக்கின்றதை அறிந்த தலைவி, தோழியிடம் அறத்தொடு நின்று என் காதலை உறவினர்க்கு உணர்த்த வேண்டாம். அதற்குள் என் தலைவன் என்னை மணப்பான் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றாள்.

**அறிவிப்பேம் கொல்? அறிவியேம் கொல்?**
என

**இருபால் பட்ட சூழ்ச்சி ஒரு பால்**
**சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை**
**இன் உயிர் கழிவது ஆயினும் நின் மகள்**
**ஆய் மலர் உண்கண் பசலை**
**காமநோய் எனச் செப்பதீமே -**

**(அகநானூறு -52) 11**

என்னை வருத்துகின்ற இந்தக் காமநோயினால் உருவான பசலைதான் என்னுயைட இந்த மெலிவான நிலைக்குக் காரணம் என்பதை அறத்தொடு நின்று என்தாயிடம் சொல்ல வேண்டாம். நான் இறந்து போக நேரிட்டாலும் இதனைச் சொல்ல வேண்டாம் என்று தலைவி தலைவன் மீது பழி சொல்ல விரும்பாதவளாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

சங்க காலத்து மக்களும், சங்க இலக்கியங்களும் அக்காலத்து வாழ்வியல் முறைமைகளை, மெல்லிய உணர்வுகளை எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளதை அகநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக் கின்றன. ஒட்டுமொத்தமாகத் தலைவன் மீதான நம்பிக்கையும், வாழ்க்கை மீதான பிடிப்பும் அவர்களிடம் இருந்துள்ளதை உணர்த்துகின்ற வகையில் அமைந் துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## மேற்கோள்


1. சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனை மதிப்பீடு - ச.அகத்தியலிங்கம் ப-4
2. மேலது -ப.4
3. கருவும் கருச்சார்ந்த செய்திகளும்- தலைப்பு
4. மேலது ப .5
5. கவிதையும் வாழ்'க்கையும் அ.மு.பரமசி வானந்தம் - ப.38
6. மேலது ப.38
7. தமிழர் வாழ்வியல் -27
8. தமிழர் வாழ்வியல் -26
9. அகநானூறு -28
10. அகநானூறு 48
11. அகநானூறு -52